இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 2 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 26 – வெள்ளிக்கிழமை 11 ஆகஸ்ட் 2023 – திருச்சி★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 2: Thiruvalluvar Year - 2054 - Aadi 26 - Friday 11 August 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்!

# மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை!

## நாடாளுமன்றத்தில் மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ராகுல் காந்தி ஆவேச குற்றச்சாட்டு!

**டெல்லி, ஆக. 11 -**

**“நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்! என்றும் மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை செய்யப்பட்டுள்ளார்” என்றும் நாடாளுமன்றத்தில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் ராகுல்காந்தி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மோடி அரசு மீது “இந்தியா” கூட்டணிக் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று முன்தினம் 2வது நாளாக விவாதம் நடைபெற்றது.

இதில், காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தி கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

சபாநாயகர் அவர்களே, முதலில் மீண்டும் என்னை மக்களவையில் இணைத்துக் கொண்டதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒற்றுமை நடைபயணத்தின் போது அனைத்துத் தரப்பு மக்களின் குரல்களையும் கேட்டேன். நான் இன்று பேச தொடங்கியவுடன் வெறுப்புடன் சிலர் பேசத் தொடங்கினார்கள்; இந்த வெறுப்புணர்வை நீக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். ஒற்றுமை யாத்திரையின் மூலமாக நான் நிறைய கற்றுக் கொண்டேன்; உண்மையான இந்தியாவை அந்தப் பயணத்தின் வழியாக நான் பார்த்தேன். நான் மணிப் பூருக்கு நேரில் சென்றேன்.

கடந்த முறை நான் பேசியபோது அதானியை குறித்து பேசியது உங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கலாம்.

### பா.ஜ.க.வினர் அச்சப்பட வேண்டாம்!

உங்கள் மூத்த தலைவர்கள் வேதனை அடைந்திருக்கலாம். அந்த வேதனை உங்களையும் பாதித்திருக்கலாம். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், நான் உண்மையைப் பேசி னேன். இன்று நான் அதானி பற்றி பேசப் போவதில்லை. மணிப்பூர் பற்றியே பேசப் போகிறேன் என்பதால் எனது பா.ஜ.க. நண்பர்கள் அச்சப்பட வேண்டியதில்லை.



இதயத்தில் இருந்து பேசும் பேச்சு இதயங்களை சென்றடையும் என்பதால், இதயத்தில் இருந்து பேசப் போகிறேன். 130 நாட்களுக்கு நாட்டின் ஒரு முனையில் நடைபயணம் இருந்து மற்றொரு முனைக்கு மக்களுடன் இணைந்து பயணம் நடத்தினேன். என்னுடைய பயணம் இன்னும் முடிவடையவில்லை. பயணத்தின் போதும், அதன் பிறகும் நிறைய பேர் என்னிடம் ஏன் பயணம் செல்கிறீர்கள் என்று கேட்டார்கள். குமரியில் இந்தப் பயணத்தை துவங்கிய போது, நாட்டை புரிந்து கொள்வதற்காகவே இந்திய ஒற்றுமை நடைபயணத்தை ஆரம்பித்தேன்.

### அனைத்தையும் தியாகம் செய்ய தயார்!

ஒற்றுமைப் பயணத்தில் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். நான் நம்பும் விஷயத்துக்காக உயிரைவிடவும், பிரதமர் விரும்பினால் சிறை செல்லவும் தயாராக உள்ளேன். 10 ஆண்டுகளாக பா.ஜ.க.வினரால் நான் அலைக்கழிக்கப்பட்டு உள்ளேன்.

### இந்தியாவில் தற்போது விவசாயிகளின் நிலை மிக மோசம்!

எனது பயணம் துவங்கிய போது பயம் இருந்தது. பயணத்துக்காக அனைத்தையும் தியாகம் செய்ய தயாராக இருந்தேன். இந்தப் பயணத்தில் உண்மையான இந்திய மக்களை பார்த்தேன். மக்கள், எனக்கு ஏராளமான உதவிகளை செய்தனர். அவர்களின் ஆதரவும் கிடைத்தது. ஏழைகளின் வேதனைகளையும் உணர்ந்தேன். அனைத்துத் தரப்பு மக்களும் எனது பயணத்தில் இணைந்தனர்.

விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தேன். விவசாயிகளின் இதயத்தில் இருந்த வலி என் இதயத்துக்குஇடம்மாறியது. இந்தப் பயணம் எனது வாழ்க்கையை மாற்றியது. நாட்டுமக்களின்குரலை கேட்கும் போது மனதில் உள்ள வெறுப்புகள், ஆசைகள் விலகிச் செல்லும். இந்தியாவில் விவசாயிகளின்நிலைமோசமாகஇருந்ததைக் கண்டேன்.

மணிப்பூருக்கு நான் சென்று வந்தேன். இந்நாள் வரை பிரதமர் மணிப்பூர் மாநிலத்திற்குச் செல்லவில்லை. மணிப்பூர் இந்தியாவில் இல்லையா? நாட்டின்ஒருபகுதியாக கருதாததால் தான் பிரதமர் அங்கு செல்லவில்லை. அம்மாநில மக்களைபிரதமர்கைவிட்டுவிட்டார். மணிப்பூரில் நிவாரண முகாம்களில் உள்ள பெண்கள்மற்றும்குழந்தைகளிடம்பேசினேன். தன்கண்முன்னேதன்ஒரேமகன்மீதுதுப்பாக்கி குண்டு பாய்ந்தது என்று பெண் ஒருவர் என்னிடம்சொன்னார். மகனைஇழந்தபெண் உடைமைகளை விட்டு விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

மற்றொரு முகாமில் உங்களுக்கு என்ன நடந்ததுஎன்றுஒருபெண்ணைப்பார்த்துநான் கேட்டதும் அவர் மயக்கம் அடைந்தார். நினைத்துப் பார்க்கவே பயங்கரமான சம்பவங்கள் நடந்துள்ளதாக நிவாரண முகாமில் உள்ள பெண்கள் தெரிவித்தனர்.

இந்தியா என்ற சித்தாந்தத்தையே அரசு கொன்றிருப்பது மணிப்பூர் சம்பவம் மூலம் நிரூபணமாகியுள்ளது. மணிப்பூரில் நடக்கும் சம்பவம்ஒட்டுமொத்தநாட்டின்மீதானகொலை.

### மணிப்பூரில் இந்தியாவை கொலை செய்தீர்கள்!

பா.ஜ.க.வின்அரசியலில்,மணிப்பூரில்நமது நாடு கொலை செய்யப்பட்டுவிட்டது. மணிப்பூரில்இந்தியாவைகொலைசெய்தீர்கள்.

மணிப்பூரில்மக்களைகொன்றதால்இந்திய தாய் கொலை செய்யப்பட்டார். நீங்கள் தேச பக்தர்கள் அல்ல. தேச துரோகிகள். மணிப்பூர் குரலை நசுக்கிவிட்டீர்கள்.

என் ஒரு தாய் இங்கே அமர்ந்திருக்கிறார். மற்றொரு தாயை மணிப்பூரில் கொன்றிருக்கிறீர்கள். நீங்கள் தேச பக்தர்கள் அல்ல, தேசத் துரோகிகள். மணிப்பூர் கலவரத்தை இந்திய ராணுவத்தால் ஒரே நாளில் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அதனை நீங்கள் செய்யவில்லை.

### அரசின் அலட்சியத்தால் மணிப்பூர் - அரியானா எரிகிறது!

மோடி தலைமையிலான அரசின் அலட்சியத்தால்மணிப்பூர், அரியானாபோன்ற மாநிலங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு ராகுல்காந்தி உரையாற்றினார்.

### பா.ஜ.க. கடும் இடையூறு!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ராகுல் காந்தி உரையாற்றிய போது, பா.ஜ.க. உறுப்பினர்கள்தொடர்ந்துஇடையூறுசெய்யும் வகையில் தொடர் அமளியில் ஈடுபட்டனர். மக்களவைத் தலைவரின் வேண்டுகோளை மதிக்காமல் பா.ஜ.க.வினர் முழக்கமிட்டுக் கொண்டே இருந்தனர்.

## சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா?

# இந்திய மக்களை ஒன்றாக மதிக்கத் தெரியாத நீங்கள் தேசியவாதிகளா?

## மக்களவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஒன்றிய அரசின் மீது கனிமொழி கருணாநிதி கடும் குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஆக.11-**

**“சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோலைப் பற்றி அறிவீர்களா? தேசத்தின் அனைத்து மக்களையும் ஒன்றாக மதிக்கத் தெரியாத நீங்கள் தேசியவாதிகளா?” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஒன்றிய அரசை கடுமையாக சாடினார்.**

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது நாடாளுமன்ற தி.மு.க. குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது :-

“இந்த சுதந்திரம் நம் மீது பெரும் பொறுப்புகளை சுமத்திவிட்டுச் சென்றுள்ளது. ஏதேனும் தவறு நேர்ந்தால் இதற்கு பிரிட்டீஷ் ஆட்சியாளர்கள் காரணமாகமாட்டார்கள் என்ற டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கரின் கருத்துடன் இந்த உரையை தொடங்குகிறேன். இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை தி.மு.க. சார்பாகவும், நான் சார்ந்த இந்தியா கூட்டணி சார்பாகவும் ஆதரிக்கிறேன்.

### இரட்டை இன்ஜின் அரசு இரட்டை பேரழிவு அரசு!

ஒரு மாநிலத்தைக் காப்பாற்ற நீதித் துறை தலையிட வேண்டியிருக்கிறது. இது ஒன்றிய அரசுக்கு வெட்கக் கேடான செயல் இல்லையா? ஒன்றியத்திலும் பா.ஜ.க. அரசு மாநிலத்திலும் பாஜக அரசு என்பதை டபுள் இன்ஜின் அரசு என்று சொல்லிக் கொள்ளும் பாஜக இதை மணிப்பூரிலும் சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டது. ஆனால், இந்த டபுள் இன்ஜின் அரசு டபுள் எட்ஜூடு அதாவது இரு முனையிலும் கூரான ஆயுதமாக மணிப்பூரை தாக்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல இரட்டைப் பேரழிவு, இரட்டை முடக்கம் என்ற நிலையில் மணிப்பூரைக் கொண்டு சென்றிருக்கிறது.

வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு திரும்பிய பிரதமர் மோடி அரிதான நிகழ்வாக நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்தார். ஆனால் நாடாளுமன்றத்துக்கு உள்ளே வந்து மதிப்புக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் பேச மறுக்கிறார்.

மூத்த தலைவர் யஷ்வந்த் சின்ஹா அவர்கள் நேற்று முன்தினம் எழுதிய கட்டுரையில் ஜனநாயகம் என்பது நாடாளுமன்றக் கட்டிடத்தின் அழகால் வரையறுக்கப்படுவதில்லை... தேசத்தின் முக்கியமான பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் விவாதிப்பதில்தான் ஜனநாயகத்தின் தரம் இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

‘இந்தியா’ கூட்டணி இதற்காகத்தான் மணிப்பூர் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தது. பா.ஜ.க. அதை எதிர்க்கிறது.

### கண்ணகியின் கோபம் பற்றி தெரியுமா?

**“நீங்கள் பதிய நாடாளுமன்றத்திற்கு செங்கோலைக் கொண்டு வந்து வைத்துள்ளீர்கள். சோழர்களின் செங்கோல் என்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை முறையாக அறியவில்லை. சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா? கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?”**



மணிப்பூரில் 170 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்திருக்கிறார்கள். அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கள் இருப்பிடங்களில் இருந்து இடம் பெயர்ந்திருக்கிறார்கள். 3500 வீடுகள் எரிக்கப்பட்டுவிட்டன. இரு தரப்பிலும் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டிருக்கிறார்கள், பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

### மணிப்பூர் முதல்வரின் வெட்கக் கேடான விளக்கம்!

மூன்று மாதங்களாக நடக்கும் இந்த கலவரத்தை ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை என்று மணிப்பூர் மாநில முதல்வரிடம் கேட்டால், ‘இரண்டு சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். அரசு தந்தையை போல செயல்பட்டு இருதரப்புக்கும் இடையே பேசிக் கொண்டிருக்கிறது’ என்கிறார். இப்படி சொல்வதற்கு உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

மணிப்பூர் மாநிலம் பொதுமக்கள்போலீஸ் விகிதத்தில் இந்தியாவிலேயே உயர்ந்த நிலையில் இருக்கிறது. 161 மத்திய கம்பெனி போலீசார், அசாம் ரைபிள் படையினர் உட்பட மணிப்பூரில் இருக்கிறார்கள். ஆனாலும் அரசு மக்களைக் காப்பாற்றத் தவறவிட்டது. பிரதமரின் மவுனமும், மணிப்பூர் அரசின் செயலற்ற தன்மையும் மணிப்பூரில் வீடுகள் எரிக்கப்படவும், போலீஸாரே சூறையாடலில் ஈடுபடுவதையும், மக்களே ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாவதையும் தொடரச் செய்திருக்கிறது. பெண்களை ஆணவ அணிவகுப்பு நடத்தி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியிருக்கிறது.

இந்த டபுள் இன்ஜின் அரசு கைகளைக் கட்டிக் கொண்டு சகோதரர்கள் சண்டையிடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறது.

வன்முறை கும்பலிடம் பெண்களை பிடித்துக் கொடுத்த மணிப்பூர் போலீஸ்!

மணிப்பூரில் இரு பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட அந்த வீடியோதான் தேசத்தின் மனசாட்சியையும் உலகத்தின் மனசாட்சியையும் ஒரு சேர உலுக்கியது. 21 வயது இளம்பெண்ணின் தந்தையும், சகோதரரும் அவளைக் காப்பாற்ற போராடியபோது கொல்லப்பட்டனர். வன்முறை கும்பல் அந்த குடும்பத்தை பிடித்தபோது அந்த குடும்பத்தினர் அங்கிருந்த போலீஸ் ஜிப்சியை நோக்கி ஓடியிருக்கிறார்கள். அவர்கள் போலீஸ்காரர்களிடம், ‘எங்களை போலீஸ் ஜிப்சியில் ஏற்றி எங்காவது பாதுகாப்பான இடத்தில் கொண்டு போய்விட்டுவிடுங்கள்’ என்று பிச்சையெடுப்பதைப் போல போலீசாரிடம் கெஞ்சியிருக்கிறார்கள். ஆனால் போலீஸ் அந்த குடும்பத்தினருக்கு உதவ மறுத்துவிட்டது. மாறாக அந்த பெண்ணை வன்முறை கும்பலிடமே ஒப்படைத்திருக்கிறது போலீஸ். அதன் பிறகுதான் அந்த பெண்ணின் தந்தையும் கொல்லப்பட்டார், சகோதரரும் கொல்லப்பட்டார்.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

கலைஞர் 100 1924 - 2023



வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின் மூத்த பிள்ளையான **‘முரசொலி’**க்கு (10.8.2023) **82 ஆவது பிறந்த நாள்!**